**செ. கு. எண்:016** **நாள்: 30.01.2020**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K. பழனிசாமி**

அவர்களின் அறிக்கை – **30.1.2020**

திருவண்ணாமலை மாவட்டம், தண்டாரம்பட்டு வட்டம், சாத்தனூர் அணையிலிருந்து **2019–2020–ஆம்** ஆண்டு பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடுமாறு வேளாண் பெருங்குடி மக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருங்குடி மக்களின் வேண்டுகோளினை ஏற்று, திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டு வட்டம், சாத்தனூர் அணையிலிருந்து **7543** ஏக்கர் நிலங்கள் பயன்பெறும் வகையில் இடது மற்றும் வலது புறக் கால்வாய்களில் முறையே **302.40** மி.க.அடி மற்றும் **453.60** மி.க.அடி ஆக மொத்தம் **756** மி.க.அடிக்கு மிகாமல் **5.2.2020 முதல் 10.3.2020 வரை 35 நாட்களுக்கு** தொடர்ச்சியாக தண்ணீர் திறந்துவிடவும் திருக்கோவிலூர் அணைக்கட்டு பெண்ணையாறு பாசன பழைய ஆயக்கட்டிற்கு **5000** ஏக்கருக்கு இரண்டாம் போக சாகுபடிக்கு **1200** மி.க.அடி நீரினை நீர்ப் பங்கீடு விதிகளின்படி பிப்ரவரி முதல் தேதி முதல் ஏப்ரல் மாதத்திற்குள் விவசாயிகளின் கோரிக்கையின் அடிப்படையில் ஒரே தவணையில் தேவைப்படும்பொழுது தண்ணீர் திறந்துவிடவும் நான் ஆணையிட்டுள்ளேன்.

இதனால், திருவண்ணாமலை, விழுப்புரம் மற்றும் கள்ளக்குறச்சி மாவட்டங்களில் உள்ள **12543 ஏக்கர்** நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், விவசாயப் பெருமக்கள் நீரை சிக்கனமாக பயன்படுத்தி நீர் மேலாண்மை மேற்கொண்டு உயர் மகசூல் பெற வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**